ௐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
(பதிவு எண்: 226 / 1992)

சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

உள்ளம் தோறும் வள்ளுவம்

வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்

ஸனாதன நெறியில் வள்ளுவம்

அறத்துப்பால்

ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்

நாள் :
6, மார்கழி 2025

Date:
21, December 2025

வகுப்பு 18

www.vedaneri.org

அறத்துப்பால் - இல்லறவியல்
அதிகாரம் : 12

நடுவுநிலைமை

(அனைவரிடத்தும் ஒப்பநிற்கும் தன்மை)

நண்பர் பகைவர் அயலோர் என்னும் மூவகையோரிடத்திலும் அறத்திலிருந்து மாறாமல் ஒப்ப – ஸமமாக – நிற்கும் நிலைமை. அதாவது தமது சொந்த விருப்புவெறுப்புக்கு இடம் கொடாமல் யாவரிடத்திலும் ஸமமான அறத்தைத் கடைபிடிக்கும் தன்மை.

தமக்கு நன்மை செய்தவரிடத்தில் அந்நன்மையை நினைக்க நடுவுநிலைமை மாறும் என்பதால் செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

குறள்: 1
நடுவுநிற்றலின் சிறப்பு

குறள்: 2, 3 நன்மையும் தீமையும் கூறல்
நடுவுநிற்றலால் நன்மையும்
நடுவிகத்தலால் தீமையும் வரும்.

குறள்: 4 நடுவுநிலையாளரை அறியும் வழி
தக்கார் தகவிலரை அறிந்து கொள்ளும்
வழிமுறை

குறள்: 5 - 7 நடுவுநிலைமை தவறுவதன் கேடு
வறுமையும் செல்வமும் நடுவுநிலைமை
தவறுதலால் வருவதல்ல.
நடுவுநிலைமை தவறுதல் கேட்டிற்குக் காரணம்
நடுவுநிலைமை தவறாதவன் கேடு கேடாகாது.

குறள்கள்: 8 - 10 நடுவுநிலைமையின் வகை
8, 9 - நியாய சபையோர்க்கான நடுவுநிலைமை
10 - வணிகர்களுக்கான நடுவுநிலைமை.



1.தகுதி எனவொன்று நன்றே பகுதியால் பாற்பட் டொழுகப் பெறின்.

(நண்பர் முதலான) பிரிவுகள் தோறும் ஒழுங்கினை விடாமல் நடக்கப்பெற்றால் நடுவுநிலைமையெனும் ஓர் அறமே மேலான நன்மையாகும்.

தகுதி = யோக்யதை. அறப்பயனைத் தரும் யோக்யதை உடையது - நடுவுநிலைமை. பண்பாகு பெயர்.
பகுதியால் = பகுதிதோறும் = பிரிவு தோறும்
பிரிவு - நண்பர், பகைவர், அயலோர் (நொதுமல்) எனும் பாகுபாடு
ஒன்று - ஓர் அறம்
ஓர் அறமுமே நன்று - அறங்களுள் மேலானது.
பெறின் - அவ்வொழுக்கத்தின் அருமை தோன்ற நின்றது.

நடுவுநிலைமை அறங்களுள் மேலான அறமாகும்.

இதனால் நடுவுநிலைமையின் சிறப்புக் கூறப்பட்டது.

2.செப்ப முடையவன் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற் கேமாப் புடைத்து.

நடுவுநிலைமையை உடையவனது செல்வமானது அழிதலின்றி (அவனுக்கும்) அவன் ஸந்ததியார்க்கும் உறுதியாதலை உடையதாகும்.

செப்பம் உடையவன் = நடுவுநிலைமை உடையவன்
ஆக்கம் = செல்வம்
சிதைவின்றி = அழிவின்றி
எச்சம் = எஞ்சிருப்பது = ஸந்ததி. ஒருவன் இறக்கும்பொழுது எஞ்சி நிற்கும் வாரிசுகளை எச்சம் என்றார்.
எச்சத்திற்கு(ம்) = உம் எனும் உம்மை தொக்கி நிற்பதால் அவனுக்கும் இறுதிவரை உறுதியுடையது என்பது பெறப்படுகிறது.

நடுவுநிற்றல் அறமாகையால் செல்வம் அறந்தோடு வருவதாயிற்று. அதனால் அழியாமல் இருப்பதாகும்.

3.நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்.

நடுவுநிலைமையை விட்டு நீங்குதலால் உண்டாகும் செல்வத்தை நன்மையைத் தருவதாக இருந்தாலும் அப்பொழுதே விட்டுவிட வேண்டும்.

நன்றே தரினும் - “உம்” தராது என்ற பொருளதாம். அப்படியே தரும் என்றாலும்
நடுவிகந்து - நடுவுநிலையை விட்டு நீங்குவதால்
(இகத்து என்பது இகந்து எனத் திரிந்து நின்றது)

நடுவு நீங்கி ஓரம் சார்வதால் செல்வம் வந்தாலும் அது அப்போதைக்கு இன்பத்தைத் தந்து பிறகு தீமையையே தரும் என்பதை உணர்ந்து நடுவுநீங்குதலை விட்டுவிட வேண்டும்.

இவை இரண்டு பாட்டாலும் முறையே நடுவு நிற்றலால் வந்த செல்வம் நன்மையைத் தருதலும் நடுவிகத்தலால் வரும் செல்வம் தீமையைத் தருவதும் சொல்லப்பட்டது.

4.தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்.

இவர் நடுவுநிலையை உடையவர்; இவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்னும் சிறப்புப் பெயர் அவரவருடைய நன்மக்களது உண்மையாலும் இன்மையாலும் அறியப்படும்.

தக்கார் - நடுவுநிலைமை உடையவர்
தகவிலர் - நடுவுநிலைமை இல்லாதர்
எச்சம் - எஞ்சி நிற்கும் வாரிசுகள்

பிள்ளைகள் நல்லவர்களாக இருப்பதும் தீயவர்களாக இருப்பதும் தந்தையின் நடுவுநிலைமையைக் காட்டும்.

மகவுரைக்கும் தந்தை நலத்தை.
பழியின்மை மக்களால் காண்க.

- நான்மணிக்கடிகை

முக்குணம் தம்மின்மாறி முயங்கிடும் தந்தைக் கப்போது
எக்குணம் உதிக்கும் பிள்ளைக் கதுகுணம் விதியதாமால்.

- பெருந்திரட்டு

மகனறிவு தந்தை யறிவு. - நாலடியார்

இதனால் தக்கார் தகவிலரை அறியும் வழி கூறப்பட்டது.

5.கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க் கணி.

(முன்னர் செய்த தீவினையின் பயனாக செல்வம் முதலானவை) கெட்டுத் துன்பம் வருதலும் (நல்வினையின் பயனாக செல்வம் முதலானவை) பெருகி இன்பம் வருதலும் (யாவருக்கும்) இல்லாதவையல்ல. (இதனை அறிந்து) மனதில் (செல்வம் கருதி) சாய்தல் இல்லாமையே அறிவால் நிறைந்திருப்பவருக்கு மேலும் அழகு சேர்க்கும் அணிகலனாகும்.

கேடு - கெடுதல் - செல்வம் முதலானவை அழிதல்
பெருக்கம் - செல்வம் முதலானவை பெருகுதல்
இல்லல்ல - இல்லாதவை அல்ல. ஏற்கனவே அனைவருக்கும் அனுபவத்தில் இருப்பவை.
கோடாமை - கோடுதல் - கோணுதல் - ஓரம் சாய்தல் (நடுவுநிமைமை தவறுதல்) அது இல்லாமை.
அணி - அணிகலன்.

நமது இப்போதைய முயற்சியால் அல்ல, பழவினையால் செல்வம் கெடுதலும் பெருகுதலும் இருக்கிறது என்ற உண்மையை அறிந்தவர்கள் செல்வத்திற்கு ஆசைப்பட்டு நடுவுநிலைமை தவறுவது இல்லை. அவ்வாறு இருத்தல் அவர்கள் அறிவுடைமைக்கு அழகாகும்.

இதனால் நடுவுநிலைமை தவறாமை அணி - அழகு - என்று கூறப்பட்டது.



7.கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம் நடுவொரீஇ அல்ல செயின்.

(ஒருவன்) தன்னுடைய மனதானது நடுவுநிற்றலை நீங்கு அறனல்லாத செயல்களைச் செய்ய நினைக்குமானால் அந்நினைவை (தான்) அழிவதற்கான முதற்காரணம் என்று அறியவேண்டும்.

வாசனையினால் தூண்டப்பட்டு மனதில் தர்மவிரோதமான ஒரு எண்ணம் தோன்றுகின்றபொழுது அது தன்னுடைய அழிவுக்கு காரணமானது என்று ஒருவன் அறிந்து கொள்ள வேண்டும். (அறிந்து அதை விலக்க வேண்டும்.)

இதனால் நடுவுநிலைமை தவறுதலால் வரும் கேடு கூறப்பட்டது.

7.கெடுவாக வையா துலக நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவுநிலைமையுடன் அறத்தின் வழியே நின்றவனுடைய வறுமையை வறுமையென்று உயர்ந்தோர் நினைக்க மாட்டார்கள்.

தாழ்வு = வறுமை.

கெடுவாக வையாது உலகு - கெடுதலாகக் கருதார் சான்றோர் - வறுமை என்று நினைக்க மாட்டார். செல்வமென்று கருதுவர் என்பது குறிப்பெச்சம்.

இதனால் நடுவுநிலைமை தவறாதவனின் வறுமை தாழ்வன்று என்று கூறப்பட்டது.

இவை மூன்று பாட்டாலும் முறையே கேடும் பெருக்கமும் நடுவுநிலைமை தவறுதலால் வருவனவல்ல என்பதும்,
நடுவுநிலைமை தவறுதல் கேட்டிற்குக் காரணம் என்பதும்,
நடுவுநிலைமையில் தவறாதவனது தாழ்வு கேடாகாது என்பதும் சொல்லப்பட்டன.

8.சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி.

(முன்னர்) நேராக இருந்து (பின்னர் பொருளின்) அளவினை உள்ளவாறு காட்டும் துலாக்கோல் போல, நேர்மையாக இருந்து உண்மையை ஆராய்ந்தறிந்து நடுவுநிலைமை தவறாமல் இருப்பது சான்றோர்க்கு அழகாகும்.

கோல் - துலாக்கோல் - தராசுக்கோல். முன்னர் ஸமமாக இருத்தல், பின்னர் உள்ள அளவை உள்ளவாறு காட்டுதல் தராசின் தன்மையாகும்.
சான்றோர் சமன் - விருப்பு வெறுப்பின்றி நேராக இருத்தல்.
சீர்தூக்கல் - உண்மையை உள்ளவாறு அறிதல்.
ஒருபால் கோடாமை - நண்பர், பகைவர், அயலோர் மூவரிடத்தும் ஒப்ப நடத்தல்.

(முன்னே) தான் சமமாக இருந்து (பின்னர் தன்னிடத்தே வைத்த பொருளை) அளவு செய்யும் துலாக்கோல் போல (விருப்பு வெறுப்புகள் இன்றித்) தான் முன் சமமாக இருந்து ப்ரச்சனையை நன்கு ஆராய்ந்து அறிந்து, பின்னர் ஒரு பக்கம் சாயாமல் நடுவுநிலையோடு பேசுதல் சான்றோர்க்கு அழகாகும்.

இதனால் நடுவுநிலைமை தவறாமை சான்றோர்க்கு அழகு என்று கூறப்பட்டது.

9.சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டம் இன்மை பெறின்.

(பற்றினால்) மனதில் ஒருவருக்கு ஆதரவாகக் கோணுதல் இல்லாமையைப் பெற்றால் சொல்லில் கோணுதல் இல்லாத நடுவுநிலைமையானது உண்டாகும்.

சொற்கோட்டம் - ஒரு தலையாகப் பேசுதல்.
செப்பம் - நடுவுநிலைமை
உட்கோட்டம் - மனதில் (சொந்த விருப்பு வெறுப்பினால் அறத்தை விடுத்து) ஒரு சாராருக்கு ஆதரவாக சிந்தித்தல்.

(பற்றினால் அறத்தை விடுத்து ஒருவருக்கு ஆதரவாக மனதில் கோணுதல் இல்லையென்றால் சொல்லில் கோணுதல் இருக்காது.

நடுவுநிலைமை என்பது சொல்லில் கோணுதல் இல்லாமை. அறநூல்கள் கூறிய நெறிமுறைப்படி பக்கச் சார்பு (பக்ஷபாதம்) இல்லாமல் சொல்லுதல் நடுவுநிலைமையாகும்.

மனது, தனக்கு வேண்டியவர் என்ற பற்றினால் ஒரு பக்கத்தில் சாய்தல் இல்லாது இருந்து, அறத்தின்படி பேசுதல் நடுவுநிலைமையாகும் என்று கூறியதனால், மனக்கோட்டம் இருந்து கூறுதல் நடுவுநிலைமை ஆகாது என்பது பெறப்பட்டது.

இவை இரண்டு பாட்டாலும் சபையில் பேசுகின்ற அறிஞர், அரசன் (ப்ராஹ்மணர், க்ஷத்திரியர்) ஆகியோர்க்கான நடுநிலைமை எனும் அறம் கூறப்பட்டது.



10.வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின்.

பிறர் பொருளையும் தம்முடைய பொருளைப்போலப் பாதுகாத்துச் செயல்பட்டால் அச்செய்கையானது வியாபாரம் செய்பவருக்கு (நடுவுநிலைமையோடு கூடிய) நல்ல வியாபாரம் ஆகும்.

பிறர்பொருளை தம்பொருள்போல் பேணிச் செயல் = தன் பொருளுக்குக் குறைவு (நஷ்டம்) வராமல் காத்துச் செயல்படுவதுபோல் பிறர்பொருளுக்கும் குறைவு (நஷ்டம்) வராமல் காத்துச் செயல்படுதல்.

வாணிகம் செய்பவர்கள் ஒரு பொருளை ஒருவரிடம் வாங்கி இன்னொருவரிடம் விற்கிறார்கள். அவ்வாறு வாங்கும் பொழுது நியாயமாக வாங்கி, கொடுக்கும் பொழுதும் நியாயமாகக் கொடுத்தால் அது நடுவுநிலைமையோடு கூடிய வணிகம் ஆகும்.

இதனால் வைச்யர்களுக்கான நடுவுநிலைமை எனும் அறம் கூறப்பட்டது.

இம்மூன்று பாட்டாலும் நடுவுநிலைமையின் வகை கூறப்பட்டது.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com